# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.212/மா/2023
நாள் 10.07.2025

திரு ஆர். மயில்சாமி — முறையீட்டு மனுதாரர்
மதுரை

செயற்பொறியாளர் (திட்டம்) — எதிர் மனுதாரர்
மதுரை மாநகராட்சி

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி என்பவரின் 10.07.2023 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 11.07.2023 அன்று பெறப்பட்டு 212/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி தனது 10.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1 புது விளாங்குடி செம்பருத்தி நகர் மேற்கு பகுதியில் மெய்யப்பன் நகர் என்ற பெயரில் வீட்டு மனை பிரிவாக பல மனைகள் விளாங்குடி பேரூராட்சியாக இருந்த போது மனை பிரிவுகள் உருவாக்கப்பட்டது. அரசு அங்கீராம் எண் ம.வ./ந.ஊ.எண்.885/1992 கோப்பு எண் 22835/92 எல்ஏ1 ஆகும். இந்த வீட்டு மனை பிரிவுகளுக்கு இரண்டு பூங்காக்கள் ஒதுக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த இரண்டு பூங்காக்களும் மெய்யப்பன் நகரில் காணாமல் போய் விட்டது. மேலும், பேரூராட்சியில் இருந்து மாநகராட்சியாக (விரிவாக்கம்) செய்யப்பட்டு சுமார் 13 ஆண்டுகளாக ஆகியும் மாநகராட்சியால் பூங்காவை கண்டு பிடித்து ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்படவில்லை. மேற்படி பூங்கா இரண்டும் பல லட்சம் ரூபாய் மதிப்பு கொண்டவையாகும். மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் இரண்டையும் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை முழுமையாக அளந்து அத்துமாள் காண்பித்து ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி (Remove) பூங்காவை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தும், ஆக்கிரமிப்புகாரர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்தும் மாநகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்தும், இது நாள் வரையிலும் பூங்காவை ஆக்கிரமிப்பாளர்களிடம் மீட்க தவறியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 31.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளரிடம் (திட்டம்) கோரப்பட்டது.

4. மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநர் கடிதம் எண் மதி/நி4/13360/2025 நாள் 10.06.2025—ல் தனது அறிக்கையினை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார். அதில்—

"மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள மண்டலம்—2, வார்டு எண் 1, புதுவிளாங்குடி பிட் II, சர்வே எண் 183/1A, 1B, 3, 187/1, 8, 184/1,2ல் அமையும் மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ம.உ./ந.ஊ.இ. எண் 885/92—ன்படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்தால் திட்ட அனுமதி எண் 3/92 நாள் 27.08.1992—ன்படி திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முந்தைய விளாங்குடி பேரூராட்சி நிர்வாக அலுவலரால் மேற்படி மனைப்பிரிவிற்கு 1/93—94 நாள் 05.05.1993—ன்படி மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அப்போதைய பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்படவில்லை. இந்நிலையில் மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண் W.P.(MD) No.5215/2019, 5216/2019, 5217/2019 மற்றும் 8341/2019—ன்படி நகர் ஊரமைப்பு இயக்குநர், மதுரை மாநகராட்சி மற்றும் பலருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

மேற்படி வழக்குகளை தள்ளுபடி செய்யக் கோரி மாநகராட்சி சார்பில் எதிர்வாதுரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் ." என தெரிவித்துள்ளார்.

5. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தில் 17.6.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 17.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1 புதுவிளாங்குடி செம்பருத்தி நகர் மேற்கு பகுதியில் மெய்யப்பன் நகர் என்ற பெயரில் வீட்டு மனை பிரிவாக பல மனைகள் விளாங்குடி பேரூராட்சியாக இருந்த போது மனை பிரிவுகள் உருவாக்கப்பட்டது. அரசு அங்கீராம் எண் ம.வ./ந.ஊ.எண். 885/1992 கோப்பு எண் 22835/92 எல்ஏ1 ஆகும். இந்த வீட்டு மனை பிரிவுகளுக்கு மூன்று பூங்காக்கள் ஒதுக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அங்கு இந்த இடம் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமானது என்று பெயர் பலகை வைக்கப்பட்டு இருந்தது. ஆனால் தனி நபர்களால் போலி ஆவணம் மூலம் அப்பூங்காக்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. பூங்காக்களின் பரப்பளவு 36 சென்ட் ஆகும். தற்போது ஒரு சென்ட்டின் மதிப்பு ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.15 லட்சம் வரை ஆகும். ஆக்கிரமிப்பு செய்துள்ள பூங்கா இடத்தை மீட்டெடுத்து பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மாநகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்தும், இவ்விடம் மதுரை மாநகராட்சிக்கு சொந்தானது என்ற பெயர் பலகை வைக்கவும், இது நாள் வரையிலும் மேற்கண்ட பூங்காவினை ஆக்கிரமிப்பாளர்களிடம் மீட்க தவறியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்."

7. மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் 17.06.2025 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மண்டலம் 2, வார்டு எண் 1, புதுவிளாங்குடி பிட் II சர்வே எண் 183/1A. 1B, 3, 187/1 & 184/1, 2ல் அமையும் மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ம.உ/ந.ஊ.இ.எண்885/92ன்படி தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்தால் திட்டஅனுமதி எண் 3/92 நாள் 27.08.1992ன்படி திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து முந்தைய விளாங்குடி பேரூராட்சி நிர்வாக அலுவலரால் மேற்படி மனைப்பிரிவிற்கு 1/93-94 நாள் 05.05.1993ன்படி மனைப்பிரிவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அப்போதைய பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்படவில்லை. 3 பூங்காக்களும் காலி மனையாக உள்ளது. இந்த 3 பூங்காக்களில் ஒரு பூங்கா இடம் வேலி அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 பூங்காக்களில் ஒரு பூங்கா இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளர் மனைகளாக பிரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு அவ்விடங்களின் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் மனையிட உரிமையாளர்கள் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் வழக்கு எண் W.P.(MD) No.5215/2019. 5216/2019. 5217/2019 மற்றும் 8341/2019 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. இத்துடன் இவ்வழக்கு சம்பந்தமான ஆவணங்களை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கின்றோம்.

மேலே குறிப்பிட்டுள்ள வழக்குகளை தள்ளுபடி செய்யக் கோரி மாநகராட்சி சார்பில் எதிர்வாதுரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதி மன்ற உத்தரவின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, வழக்கு நிலுவையில் இல்லாத பூங்காவின் இடத்தில் **"இவ்விடம் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமானது"** என்ற பெயர் பலகை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.''

8. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சியின் நகர திட்டமிடுநரின் அறிக்கை மற்றும் மண்டலம் 2ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1 புதுவிளாங்குடி செம்பருத்தி நகர் மேற்கு பகுதியில் மெய்யப்பன் நகர் என்ற பெயரில் வீட்டு மனை விளாங்குடி பேரூராட்சியாக இருந்த போது 1992ம் வருடம் மனை பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, இந்த மனை பிரிவுகளில் மூன்று பூங்காக்களுக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், பின்னர் தனி நபர்களால் போலி ஆவணம் மூலம் அப்பூங்காக்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அப்பூங்காக்களை மீட்டெடுத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மாநகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்தும், இவ்விடம் மதுரை மாநகராட்சிக்கு சொந்தானது என்ற பெயர் பலகை வைக்கவும், இது நாள் வரையிலும் மேற்கண்ட பூங்காவினை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க தவறியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மண்டலம் **2,** வார்டு எண் **1,** புதுவிளாங்குடி பிட் II சர்வே எண் **183/1A.** 1B, 3, 187/1 & 184/1, 2ல் அமைந்த மனைப்பிரிவு சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநரால் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு, மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், இதனை தொடர்ந்து முந்தைய விளாங்குடி பேரூராட்சி நிர்வாக அலுவலரால் மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அப்போதைய பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்படவில்லை என்பதும், இம்மனைப்பிரிவில் உள்ள **3** பூங்காக்களும் காலி மனையாக உள்ளது என்பதும், அவற்றில் ஒரு பூங்கா இடம் வேலி அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மீதமுள்ள **2** பூங்காக்களில் ஒரு பூங்கா இடத்தினை உரிமையாளர் மனைகளாக பிரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு அவ்விடங்களின் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதால், மனையிட உரிமையாளர்கள் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் வழக்கு எண் W.P.(MD) No.5215/2019. 5216/2019. 5217/2019 மற்றும் 8341/2019 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதும், நீதி மன்ற உத்தரவின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், வழக்கு நிலுவையில் இல்லாத பூங்காவின் இடத்தில் **"இவ்விடம் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமானது"** என்ற பெயர் பலகை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநரின் அறிக்கை மற்றும் மண்டலம் **2**–ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மண்டலம் **2,** வார்டு எண் **1,** புதுவிளாங்குடி பிட் II சர்வே எண் **183/1A.** 1B, 3, 187/1 & 184/1, 2ல் அமைந்துள்ள மெய்யப்பன் நகர் மனைப்பிரிவில், சாலைகள் மற்றும் **3** பூங்காக்களுக்காக ஒதுக்கப்பட்ட காலிமனைகளில் ஒரு பூங்காவினை உரிமையாளர் மனை பிரிவுகளாக விற்பனை செய்ததன் காரணமாக, மாநகராட்சியால் அம்மனைகளின் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதை தொடர்ந்து, மனை உரிமையாளர்களால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு எண் W.P.(MD) No.5215/2019. 5216/2019. 5217/2019 மற்றும் 8341/2019 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பது தெரிய வருகிறது.

**2014** ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு **10 (3)** (b)–ல் வழக்கு நிலுவையில் உள்ள எந்து பொருட்பாடு குறித்து, தமிழ்நாடு முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என்று கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது .

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,-

(a) xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court ;

(c) xxx

எனவே, மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ல் உள்ள மெய்யப்பன் நகரில் உள்ள வீட்டுமனைகளில் அமைந்துள்ள பூங்காக்கள் குறித்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு நிலுவையில் உள்ளதால், மனுதாரரின் 10.07.2023 நாளிட்ட முறையீட்டு மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை–625 018.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2, மதுரை மாநகராட்சி,
மதுரை.

4) நகர திட்டமிடுநர்,
மதுரை மாநகராட்சி, தல்லாகுளம்,
மதுரை–625 002.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

14/7/25
செயலாளர்.

11/7/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032